[3rd August 1966

இடங்களில் அரிசி ஒரு லிட்டர் ரூ. 1.45 என்று விற்கிறது. நியாய விலைக் கடைகளில் அரிசி இல்லை. ஆகவே, அங்கும் நியாய விலையில் அரிசி கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஸ்டாசுடரி ரேஷன் இல்லாவிட்டாலும், குடும்பக் கார்டுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கலெக்டர்கள் விநியோகத்தைக் கவனித்து வருகிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : விலை ஏறியிருப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். திருச்சி, சேலம் கலெக்டர்களுக்கு வேண்டிய ஸ்டாக் கொடுக்கப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதைப் பற்றிய விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஒவ்வொரு இடத்திலும் போதுமான ஸ்டாக் இருக்கிறது என்பதுதான் நான் தெரிந்து கொண்டிருப்பது.

திரு. கரு. சீமைச்சாமி : சார், மதுரையில் போலிக் கார்டுகள் வைத்திருந்ததாக 40 பேர்களுடைய லைசென்சுகள் ரத்து செய்யப் பட்டன. ஏன் அத்தோடு நிறுத்திவிட்டார்கள்? அந்த நபர்களை ஏன் ஜெயிலில் அடைக்க ஏற்பாடு செய்யப்படவில்லை ?

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்று தெரியாது. தனியாக எழுதினால், விசாரித்துச் சொல்லுகிறேன்.

Fair price shops in Madurai district.

* 54 *Q.*—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of fair price shops opened in Madurai district; and

(*b*) whether there is any proposal to open some fair price shops in Vedasandur area in Dindigul taluk?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The number of fair price shops opened in Madurai is 587.

(*b*) No.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : வேடசெந்தூர் பகுதி மக்கள் மழை பெய்யாததால் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க, அதற்கான நடவடிக்கைகள் எடுக்க சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தப் பகுதியில் தனிப்பட்டவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்காவிட்டாலும், கூட்டுறவு சொசைடி மூலம் அரிசி விநியோகம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

State Transport Express buses

* 55 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. Minister for Food be pleased to state the new long distant routes to be taken up by the Madras State Transport Department for running direct Express Bus Service in 1966–67 ?